

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, பி.வில்சன், என்.ஆர்.இளங்கோவன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர். எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, பி. வில்சன், என். ஆர் இளங்கோவன், தி இந்து குழும இயக்குநர் என். ராம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர் . எஸ். பாரதி, டி.கே. எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி இந்து குழும இயக்குநர் என். ராம் அவர்கள் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, பி. வில்சன், டாக்டர் கலாநிதி வீராசாமி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள்ஆர். எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவருமான துறைமுகம் காஜா, முன்னாள் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் ஆகியோர் உள்ளனர்.

# தமிழ்நாடு அரசின் சட்டப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி!

**சென்னை, ஏப்.10 -**

**ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம், பல்கலைக் கழக வேந்தர் பதவியில் இருந்து ஆளுநர் ஆர்.என்.ரவி விடுவிக்கப்பட் டுள்ளார் என்றும், முதலமைச்சரே இனி பல்கலைக் கழக வேந்தராக இருப்பார் என மூத்த வழக்கறிஞர் வில்சன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகம், சட்டப் பேரவை வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இந்தியாவில் முதல்முறையாக ஒரு லேண்ட்மார்க் ஜட்ஜ்மெண்ட் உச்சநீதிமன்றம் இன்றைக்கு தமிழ்நாடு அரசு, கவர்னர் மீது தாக்கல் செய்த வழக்கில் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த லேண்ட்மார்க் ஜட்ஜ்மெண்ட் பிரகாரம் இனி கவர்னர்கள் தேந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அவர்கள் சட்டசபையில் பாஸ் செய்து அனுப்பிய அந்த மசோதாவை *assent* கொடுக்கவேண்டும். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு அமைச்சரவையில் முடிவெடுக்கும் அந்த அறிவுரையின் பிரகாரம் நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஒரு சட்டசபை மசோதாவை ஏற்றி அனுப்பி வைக்கும் பொழுது அதை ஆளுநர்கள் காலம் தாழ்த்தக் கூடாது என்றும், அவர்கள் உடனடியாக இந்த மசோதாக்களை ஒரு மாதத்திற்குள் அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் ஒரு தீர்ப்பை கொடுத்திருக்கிறார்கள்.

அதாவது, இந்த வழக்கில் என்னவென்று பார்த்தால், ஒரு பத்து மசோதாக்கள் பல்வேறு காலக்கட்டங்களில் ஏற்றுக் கொண்டு அனுப்பப்பட்டு அந்த மசோதாக்கள் மீது ஆளுநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் காலந்தாழ்த்தி வந்தார். அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவருடைய அறிவுரையின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். அந்த பத்து மசோதாக்கள் என்ன மசோதாக்கள் என்றால், பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஆளுநர் வேந்தராக (*Chancellor*) இருக்கிறார். அந்த வேந்தர் என்ற பதவியில் உட்கார்ந்து கொண்டு, அந்த பல்கலைகழகத்திற்கு *Vicechancellor* உட்பட எல்லா நடவடிக்கைகளும் அவர் தடுத்துக் கொண்டு வந்தார். ஆகவே, அந்த வேந்தர் பதவியில் நீடிக்கக் கூடாது. அவரை வெளியேற்றி, அதற்கு பதிலாக மாநில அரசு அவர்கள் *Nominate* செய்கின்றவர்கள் வேந்தராக இருக்கவேண்டும் என்ற மசோதாக்களை ஏற்றி அனுப்பி காலந்தாழ்த்தி வந்ததால், இந்த வழக்கு தொடரப்பட்டது.

**இன்றுமுதல் நடைமுறைக்கு வரும்!**

அதோடு மட்டுமில்லாமல், *Remission of sentences* அந்த கைதிகள் கோப்புகள் (*Files*) அனுப்பப்பட்டு, அந்த கோப்புகளிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் காலந்தாழ்த்தி வந்தது. அது மட்டுமில்லாமல், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அப்பாயின்மெண்ட்ஸ் உட்பட எந்த ஒரு ஃபைல் அனுப்பினாலும், அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் காலந்தாழ்த்தி வந்ததால், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் இன்றைக்கு நான் சொன்ன பிரகாரம் ஒரு லேண்ட் மார்க் ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஜட்ஜ்மெண்ட் என்ன சொல்லியிருக்கிறது என்றால், இந்த பத்து மசோதாக்கள் 2023 வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னாடியே இரண்டு ஆண்டு காலமாக இருந்ததால், இந்த மசோதாக்கள் ஏற்றி அனுப்பி நிலுவையில் உள்ளதால், உச்சநீதிமன்றமே இதற்கு ஒப்புதல் அளித்து, ஆளுநர் கூட அளிக்கத் தேவையில்லை உச்சநீதிமன்றமே இந்த பத்து மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்து, அந்த பத்து மசோதாக்களும் இன்று முதல் நடைமுறைக்கு வரும்படியாக உத்தரவிட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இனி வரும் காலங்களில் ஆளுநர்கள் எந்த ஒரு மசோதாக்களையும், முதலமைச்சர் உட்பட அமைச்சரவை கூட்டம் *aid and advise* பிரகாரம் தான் நடந்து கொள்ள வேண்டும். அதை மீறி நடந்து கொள்ளக் கூடாது என்றும் இந்த உத்தரவில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமில்லாமல் இந்த காலகட்டத்தில் ஒரு ஆளுநர் ஜனாதிபதிக்கு ஒரு மசோதாவை அனுப்பி வைக்கலாம் என்று இந்த வழக்கில் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதன் பிரகாரம் ஒரு நான்கு, ஐந்து பிரிவுகளில் எங்கெல்லாம் ஜனாதிபதி ஒப்புதல் தேவைப்படுகிறதோ, அந்த காலகட்டத்தில் தான் நீங்கள் ஒரு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்று இந்த வழக்கில் சொல்லி இருக்கிறார்கள்.

**கால நிர்ணயம்!**

அது மட்டுமல்லாமல், கால நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஒரு மசோதா ஆளுநருக்கு வந்துவிட்டால் அந்த மசோதா 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வழக்கு தீர்ப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்று முடிவெடுக்கும் பட்சத்தில், மூன்று மாதத்திற்குள் நீங்கள் அனுப்பி வைக்கலாம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்த வழக்கின் தீர்ப்பானது ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாகும். இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் நலன் கருதி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது ஒரு வரவேற்கத் தக்க விஷயம் ஆகும்.

**மாநிலங்களின் சுய ஆட்சி!**

எங்கள் முதலமைச்சர் இந்த வழக்கின் மூலம் இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களின் சுய ஆட்சியை நிலைநாட்டி இருக்கிறார். அந்த வழக்கின் மூலமாக *democratically elected governments* இனிமேல் *Constitution* பிரகாரம் அவர்கள் செயல்பட்டு கவர்னர்கள் இடையூறாக இருந்தால், நீதிமன்றத்தை அணுகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க இந்த தீர்ப்பை பெற்றிருக்கிறார். இந்த தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களுக்கும் இது பொருந்தும். ஆகவே, இது பெரிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு.

இனிவரும் காலங்களில், கவர்னர் காலம் தாழ்த்த முடியாது. அந்த வழக்கில் நீதிமன்றம் கவர்னருக்கு என்னவெல்லாம் அட்வைஸ் வழங்கியிருக்கிறது என்றால், ஒரு கவர்னர் நண்பராக இருக்க வேண்டும். ஒரு *philosopher*ஆக இருக்க வேண்டும் - ஒரு கைடாக இருக்கவேண்டும் - ஒரு அட்வைசராக இருக்க வேண்டும். நீங்கள் *Road blocks* போடுவது போல நடந்து கொள்ளக் கூடாது என்று நிறைய அட்வைஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்த தீர்ப்பு தமிழக கவர்னருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள அத்தனை கவர்னருக்கும் இது பொருந்தும்.

**கேள்வி:** இதற்கு முன்பு ஆளுநர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருந்த நிலையில், தற்போது இந்த தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசே வேந்தரை நியமிக்குமா? அது பற்றி....

**பதில்:** இந்தப் பத்து மசோதாக்களில் ஆளுநர் பல்கலைக் கழகங்களுக்கு வேந்தராக இருப்பதை நீக்கம் செய்வதற்காக தான் இந்த வழக்கு இயற்றப்பட்டது. இந்த மசோதாக்கள் தீர்ப்பின் பிரகாரம் *Governor Deemed to Granted of assents* என்று உச்ச நீதிமன்றமே ஒரு தீர்ப்பை கொடுத்ததால், இன்றிலிருந்து அவர் அந்த பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த பில்லில் யாரை குறிப்பிட்டு இருக்கிறார்களோ தமிழ்நாடு அரசு *nominate* செய்கிறார்களோ அவர்கள் தான் வேந்தராக இருக்க முடியும்.

**கேள்வி:** ஆளுநர் *review petition* போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

**பதில்:** இன்றைய தேதியில் நீதிமன்றத்தில் அட்டார்னி ஜெனரல் சொன்னார்கள். ஆனால், தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. இனிமேல் நடவடிக்கை அவர்கள் எந்த பெட்டிஷன் போட்டாலும் அதை எதிர்த்து நாங்கள் வாதாடுவோம்.

**கேள்வி** : நீட் சம்பந்தமாக....

**பதில்:** நீட்டிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இந்த வழக்கில், ஒரு ஆளுநர் சட்டத்திற்கு எதிராக அல்லது ஒரு அமைச்சரவையின் அட்வைஸுக்கு எதிராக அவர் ஒப்புதலை நிறுத்தி வைத்தால், அவருக்கு மூன்று வழி தான் உள்ளது. அதை நிறுத்தி வைத்து அவர் மீண்டும் அதை சட்டமன்றத்திற்கு தான் அனுப்ப வேண்டும். ஒன்று அவர் பில்லை பாஸ் செய்யலாம். இல்லையென்றால், அந்த பில்லை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கலாம் மூன்றாவது *Withh held* என்றால் அது மீண்டும் சட்டசபைக்கு வந்து விடும்.

சட்டசபை இரண்டாவது முறையாக அதை ஏற்றி அனுப்பப்படும் போது ஆளுநருக்கு எந்தவித ஆப்ஷன் கிடையாது. இந்த வழக்கில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், பி.கே.பவித்ரா வழக்கை, தவறான தீர்ப்பு என்று சொல்லி, அதை *over rule* என்று சொல்லி இரண்டாவது முறையாக ஒரு சட்டசபை அதே மசோதாவை ஏற்றி அனுப்பினால், ஆளுநருக்கு எந்தவித ஆப்ஷனும் இல்லை. அவர் நிச்சயமாக அதற்கு *assent* கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். எப்போது ஒரு ஆளுநர் ஒரு பில்லை குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் என்றால் முதன்முறையாக அவருக்கு வரும்போது, அந்த நேரத்தில் அவர் அந்த ஆப்ஷனை உபயோகப்படுத்தி குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதும் *rights* கிடையாது. அதற்கும் ஒரு வரையறுத்திருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் ஜனாதிபதிக்கு அனுப்பலாம் என்று கூறி இருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் ஒப்புதல் கொடுக்கக்கூடிய மசோதாக்களுக்கு *fundamental rights affect* ஆகக்கூடிய மசோதாக்களை நீங்கள் முதல் முறையாகவோ அல்லது இரண்டாவது முறையாகவோ வரும்போது குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் என்று இந்த வழக்கில் தீர்ப்பாக சொல்லி இருக்கிறார்கள்.

**கேள்வி:** அந்த *definition*ல் நீட் *exemption* பில் வராதா? அது பற்றி....

**பதில்:** *Neet exemption Bill* குடியரசுத் தலைவர் *withheld* செய்து அதற்கு ஒப்புதல் அளிக்காததால் இந்த வழக்கின் தீர்ப்பின்படி, அதை நீதிமன்றத்தில் சேலஞ்ச் செய்யலாம் என்று இந்த வழக்கில் நீட் சம்பந்தமாக சொல்லவில்லை என்றாலும், இவர்கள் *lay* செய்திருக்கும் அந்த *rulings* பிரகாரம் பார்த்தால், நீட் மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்தது கூட நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்று தீர்ப்பில் தெள்ளத்தெளிவாக ஒரு *law lay down* செய்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவருடைய அறிவுரையின் பேரில், அதை நேற்றைக்கு நாங்கள் தாக்கல் செய்து விட்டோம். அதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வருகிற திங்கட்கிழமை அன்று விசாரணைக்கு வர வாய்ப்புகள் உள்ளது. என்றைக்கு வரும் என்று தெரியவில்லை. உச்சநீதிமன்றம் என்ன தேதி சொல்கிறார்களோ அதன் பிரகாரம் தெரிய வரும்.

இவ்வாறு பி.வில்சன் கூறினார்.

## என் தலைவரின் மகன் அகில இந்திய அளவில் வெற்றி பெற்று நிற்பது கண்டு எல்லையிலாத மகிழ்ச்சி அடைகிறேன்!

# முதல்வர் தளபதி - பல்லாண்டு காலம் தமிழ்நாட்டுக்குப் பணியாற்ற வாழ்த்துகிறேன்!

## சட்டப்பேரவையில் – அவை முன்னவர் துரைமுருகன் உருக்கம்!

**சென்னை, ஏப். 10 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், உச்ச நீதி மன்றத் நீதிமன்றத் தீர்ப்பினை வரவேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், "என் தலைவருடைய மகன், அகில இந்திய அளவில் வெற்றி பெற்று நிற்கிறார் என்பதைக் பார்க்கும்போது எல்லையிலா மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குறிப்பிட்டு நெகிழ்ந்தார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

இங்கே எல்லோரும் முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்கள். நான் இதிலே பேசாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால், இவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானம் வந்து இங்கே அவையிலே பேசுகிறபோது பின்னாள் வரலாற்றில் இதை யார், யார் பாராட்டினார்கள் என்று ஒன்று வருமே! (மேசையைத் தட்டும் ஒலி) யார், யார் இந்த மனது இல்லாமல் கல் மனதாக இருந்தார்கள் என்று அதுவும் வருமே! (சிரிப்பொலி) (மேசையைத் தட்டும் ஒலி) என்ற காரணத்தால் நான் பாராட்ட வேண்டுமென்று நினைக்கிறேன்.

'எல்லாவற்றிற்கும் மேலாக தளபதி அவர்களை இளமையில் இருந்து தெரிந்தவன் என்கின்ற முறையில் அவர்களுடைய தந்தையார் மடியிலே நான் வளர்ந்தவன் என்றாலும் இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறது இது ஒன்று மட்டுமல்ல. காலையிலே எழுந்து பத்திரிகை பார்த்தேன். உள்ளபடியே என் கண்கள் கலங்கிவிட்டது. காரணம், பொருளாதாரத்திலே இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்ற ஒரு பெரிய சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் எந்த முதலமைச்சரும் பெறாத சாதனையை தமிழ்நாட்டிலே நிகழ்த்துகிறபோது நான் அதற்காக வந்து அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, கை கொடுத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மறுபடியும் அவர்களுடைய roomக்குப் போகலாம் என்று எழுந்து போகிறபோது எனக்கு இந்த செய்தியை சொன்னார்கள். இரட்டிப்பு மகிழ்ச்சியோடு நான் வந்து அமர்ந்திருக்கிறேன்.

**ராஜ மன்னார் கமிட்டி!**

எனவே, 1974 ஆம் ஆண்டு இந்த அவையில் தலைவர் கலைஞர் அவர்கள் ராஜா மன்னார் கமிட்டியினுடைய reportஐ வைத்து மாநில சுயாட்சியை பற்றி மிகப்பெரிய விளக்கத்தை பேசினார்கள். மாபெரும் தலைவர்கள் அன்றைக்கெல்லாம் இருந்தார்கள். அவர்களெல்லாம் உரையாற்றினார்கள். அன்றைக்கு நானும் எழுந்து என்னால் முடிந்ததை சொன்னேன். அதன் debateல் அதிகமான அளவில் சொன்னது, "Governor பதவி இருக்கக்கூடாது" என்பதுதான். காரணம், அது தேவையில்லாத ஒன்று என்று அன்றைக்குப் பேசினார்கள். அவருடைய தந்தை யார் மாநில சுயாட்சிக்கு அடிகோலினார், அவருடைய மகன், இன்றைக்கு Governor தேவையில்லை என்கிற அளவில் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நினைக்கிறபோது, எனக்கு ராஜ ராஜ சோழனுக்குப் பிறகு, ராஜேந்திர சோழன் தமிழ்நாட்டு எல்லை வரையில்தான் நின்றான். ராஜேந்திரசோழன் கங்கை வரையிலும் கொண்டுபோய் சேர்த்தான். மகேந்திர வர்ம பல்லவன், காஞ்சிபுரம் வரையில் நின்றான். அவருடைய மகன் நரசிம்மவர்ம பல்லவன் வாதாபி வரையில் சென்றான்.

ஆகவே, என் தலைவருடைய மகன், அகில இந்திய அளவில் வெற்றி பெற்று நிற்கிறார் என்று நினைக்கும் பொழுது, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்களுக்கு எத்தனை மகிழ்ச்சி என்று கருதுகிறீர்களோ, அவை அத்தனையையும் செய்தவர். இன்னொன்றையும் சொல்கிறேன்.

**முதலடி கொடுத்த திராவிட இயக்கம்!**

இந்தியாவின் அரசியல் சட்டத்திற்கு முதலடி கொடுத்ததே, திராவிட இயக்கம்தான். செண்பகம் துரைராஜ் வழக்கில், முதல் Constitutional Amendment கொண்டுவந்ததும், இந்த திராவிட இயக்கம்தான். அங்கு ஒருவர் சுட்டிக்காட்டியதைப்போல், தேசியக் கொடியை ஏற்றுவதற்கு உரிமையை வாங்கி எல்லோருக்கும் கொடுத்தது, அவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைதான், அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்கள் கொடி ஏற்றுகிறபோது சொன்னார்கள், 'இந்த உரிமையை வாங்கித் தந்தவர் கலைஞர்' என்று அன்றைக்கு இந்த மன்றத்தில் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, மாநில சுயாட்சியை எதிர்த்து கலைஞர் அவர்கள் ராஜமன்னார் கமிட்டியைப் போட்ட பிறகுதான், மத்தியில் ஒரு கமிட்டி போட்ட பிறகு, இன்றைக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. தீர்க்கப்படுவதற்கு. ஆகையால், இன்றைக்கு Governor என்பவர், ஏனோ தன்னை மன்னர் என்று நினைத்துக் கொண்டு, அவர் நடக்கக் கூடாது. நம் மாநிலத்தில் அப்படித்தான் நடக்கிறார், கேரள மாநிலத்தில் ஒருவர் அப்படி நடக்கிறார், பஞ்சாபில் ஒருவர் நடக்கிறார்; பெங்களூருவில் ஒருவர் நடக்கிறார். ஆகையினால், இவரைப் பார்த்துதான், பிற Governors அனைவருக்கும் ஆணவம் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணவம் வந்த Governor ஐயே அங்குசம் கொண்டு அடக்கிவிட்டார்.

**ஆளுநரின் ஆணவம்!**

இந்த ஆணவத்தை மற்றவர்கள் பின்பற்றுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள், இந்த ஆட்சியை எந்த முறையில் நடத்துகிறார் என்பதற்கு, இன்றைக்கு பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியே சாட்சி. மத்திய அரசை எதிர்த்து நிற்பதில், வெற்றி பெறுவதில், தளபதி அவர்கள் எப்படி இருக்கிறார் என்பதற்கு, இன்றைக்கு இந்தத் தீர்ப்பே ஒரு சாட்சி. என் தலைவர் இன்றைக்கு இருந்திருந்தால், எப்படிப் பாராட்டுவாரோ, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய உணர்வுகளை என் நெஞ்சில் எப்போதும் தேக்கி வைத்துள்ள நான், அந்த கலைஞரை நினைத்து, எங்களுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் பல்லாண்டு காலம் நல்ல உடல் நலத்துடன் வாழ்ந்து, இந்த நாட்டிற்கும் மண்ணிற்கும், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்மொழிக்கும் பணியாற்ற வேண்டுமென்று மூன்று முறை அவர் வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## திருவாரூர் மாவட்டம் பணியின்போது உயிரிழந்த

# பெருகவாழ்ந்தான் காவல் உதவி ஆய்வாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 10 -**

**திருவாரூர் மாவட்டத்தில் பணியின்போது மயங்கி விழுந்து உயிரிழந்த பெருகவாழ்ந்தான் காவல் நிலைய உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த M.ராஜேந்திரன் (வயது 52) என்பவர் கடந்த 5.4.2025 அன்று பணியின் நிமித்தமாக மண்ணுக்குமுண்டான் கிராமத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக மயக்கமடைந்து சிகிச்சைக்காக அருகிலுள்ள சித்தமல்லி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

ராஜேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முப்பது இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

**ஆளுநர் ரவிக்கு உச்சநீதி மன்றம் "பளார்" அறை!**

